**O.S.No.131/2020**

**DW 1: ஷாஜகான்** தேதி 17.02.2026

**பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1 ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து எனக்கு 14.05.2007 ம் தேதியில் ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து 1 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதியிடம் கடந்த 14.11.2005 ம் தேதியில் ஒரு உரிமை ஒப்படைப்பு ஆவணம் மூலமாக அடமானம் எழுதி கொடுத்து ரூ.4,45,000/- கடனாக பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல, பதிவு செய்யப்படவில்லை, ஆனால் அது Wizeman Home Finance Private Limited ல் அடமானம் வைத்திருந்தார்கள். பொதுவாக தனியார் நிறுவனம் அல்லது அரசு சார்ந்த நிறுவனம் என்றால் அடமான கடன் பத்திரத்தை பதிவு செய்த பிறகு தான் கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான், 1 ம் பிரதிவாதிக்கும், Wizeman Home Finance Private Limited க்கும் இடையே MOU இருந்தது. 1 ம் பிரதிவாதி, 4 ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றும், அந்த விபரம் எனக்கு தெரியும் என்றும், அது தெரிந்தே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரத்தின்படி 16.08.2011 ம் தேதியில் நான் வாதியிடம் ஒரு கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரிதான். அந்த கிரய ஒப்பந்த பத்திரப்படி ரூ.2 லட்சம் முன் தொகையாக நான் பெற்றுக் கொண்டதாகவும், மீதி ரூ.5 லட்ச கிரய தொகையை பெற்றுக் கொண்டு கிரயம் செய்து கொடுப்பதாக சொல்லப்படும் சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு கிரய தொகை எதுவும் நான் வாதியிடம் இருந்து வாங்கவில்லை என்றும், 4 ம் பிரதிவாதியின் கடனை ஏமாற்றும் எண்ணத்தில் நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திற்கான அசல் ஆவணம் 1 ம் பிரதிவாதி வசம் இல்லை என்று சொன்னால் சரிதான், அது பைனான்சில் உள்ளது.

அசல் ஆவணம் இல்லாமல் ஏற்படுத்திக் கொண்ட பொது அதிகார ஆவணம், அதன் பேரில் ஏற்பட்ட கிரய ஒப்பந்த பத்திரமும் 4ம் பிரதிவாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல, இது பொதுவாக நடைமுறையில் இருப்பது தான். நானும், வாதியும் 4ம் பிரதிவாதியிடமிருந்து வாங்கிய கடனை ஏமாற்றும் எண்ணத்தில் மோசடியான கிரய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னையும், 4ம் பிரதிதிவாதியையும் ஏமாற்றிவிட்டார். 1ம் பிரதிவாதி என் மனைவியுடன் ஏற்படுத்திக் கொண்ட 14.05.2007ல் ஏற்படுத்திக் கொண்ட கிரய ஒப்பந்த பத்திரம், அதற்கு ஆதரவாக ரூ.6,50,000/-க்கு விலை பேசி ரூ.2 லட்சம் முன் பணமாக பெற்றுக் கொண்டதாக கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் 4ம் பிரதிவாதி பைனான்சிற்கு 2007 ஜூன் முதல் ஏப்ரல் 2012 வரை மாதம் தொகை செலுத்திவந்தேன். அவ்வாறு தொகை செலுத்தியதற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க என் மனைவி 4ம் பிரதிவாதியிடம் வாங்கிய கடனை பெரும் பகுதி செலுத்திவிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் மனைவி தொகை செலுத்தியதாக தான் உள்ளது , நான் செலுத்தியதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் பிரமாண பத்திரிக்கை பாரா 5ல் 1ம் பிரதிவாதிக்கு 15.08.2012ல் தொகை செலுத்தி அதற்கான இரசீது வாதியிடம் ஒப்படைத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான அசல் ஆவணம் 4ம் பிரதிவாதியின் வசம் இருக்கும்போது 1ம் பிரதிவாதியிடம் நான் ஏற்படுத்திக் கொண்ட கிரய ஒப்பந்த பத்திரம் 4ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல, நான் கிரயம் போடவில்லை, பொது அதிகார பத்திரம் தான் எழுதி கொடுத்தார்கள். அந்த பொது அதிகார பத்திரம் தற்போது நடைமுறையில் இல்லை, எனக்கு தெரியாமலேயே ரத்து செய்யப்பட்டுவிட்டது. 4ம் பிரதிவாதி கடனை தீர்த்த பிறகு சொத்தின் பேரில் நடவடிக்கை எடுக்க முடியும் என்று

சொன்னால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதியிடன் வாங்கிய கடனை முழுமையாக செலுத்தவில்லை என்பதால் தான் 1 ம் பிரதிவாதியின் அசல் ஆவணம் 4 ம் பிரதிவாதி வசம் உள்ளது என்று சொன்னால் சரிதான். 4 ம் பிரதிவாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்ற வேண்டி நானும், 1 முதல் 3 பிரதிவாதிகள் சேர்ந்து வஞ்சக கூட்டாக இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி அவரது சம்பந்தியுடன் சேர்ந்து என்னையும், 4 ம் பிரதிவாதியையும் ஏமாற்றும் எண்ணத்தில் செயல்பட்டு வருகிறார் என்று சொல்கிறேன். நான் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள அனைத்தும் வாதி பிராதில் சொல்லியிருக்கும் சங்கதிகளை சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கல்ல என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற அனுமதியின் பேரில் முதல் விசாரணை தொடரப்படுகிறது.</u>**

வாதி தரப்பு வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணங்கள் கடன் கட்டிய இரசீதுகள். அந்த இரசீதுகளை 1 ம் பிரதிவாதியிடமிருந்து வாங்கி வாதி தாக்கல் செய்துள்ளார்.

**<u>4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி இரசீதுகள் நான் கடனை செலுத்தியதற்கான இரசீதுகள் என்றால் சரிதான். எனக்கும், வாதிக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை என்றால் சரியல்ல. நான் கடனை செலுத்தியதற்கான இரசீதுகளை வாதி வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணமாக தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்ன என்றால் குறிப்பிடும்படியான காரணம் எதுவும் இல்லை. 4 ம் பிரதிவாதியிடம் வாங்கிய கடனை 1 ம் பிரதிவாதி ஏமாற்றும் எண்ணத்தில் வாதி ஜெகதீசன் வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல.